**பாணந்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாணந்துறை களுத்துறை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,582,710 தொகையான 4 சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது வேலைக் கடன்கொடுத்தோருக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,382,182 தொகை வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஆண்டிற்கான செலவினமாகக் கருதப்பட்டு வேலைச் செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் வேலைக் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் வேலை செலவினம் அதே பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய மூலதன மானியம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய வேலைச் செலவினமான (வேலைக் கடன்கொடுத்தோர்) ரூபா 29,338,163 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மின்சாரக் களஞ்சியம் மற்றும் பொதுக் களஞ்சிய இருப்பு கணக்குகளுக்கு ஆண்டின் போதான கொள்வனவுகளும் விநியோகங்களும் கணக்கீடு செய்யப்பட்டு இறுதி இருப்பு மீதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கொள்வனவுகளான முறையே ரூபா 3,665,678 தொகையும் ரூபா 4,271,728 தொகையும் விநியோகங்களான ரூபா 3,379,374 தொகையும் ரூபா 3,134,870 தொகையும் கணக்கீடு செய்யப்படாது ஆண்டின் இறுதியில் பௌதீக இருப்பு மீதிக் கணக்கின் இறுதி மீதியாகக் காண்பிக்கப்பட்டு கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிக்கிடையிலான வேறுபாடு ஆண்டின் நிதி விளைவிற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் பட்டோலைப் படியான மீதியும் பேரேட்டுக் கணக்கின் படி ஊழியர் கடன் மீதியைச் சமப்படுத்துவதற்காக நாட்குறிப்பின் மூலம் ரூபா 516,626 ஊழியர் கடன் கணக்கு வரவு வைக்கப்பட்டு பற்றாக்குறை மற்றும் மிகைக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் இதற்குரித்தான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திடமிருந்து கடன் அடிப்படையில் சபைக்கு 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,456 தொகையான கப் வண்டியின் பெறுமதி கடன் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டு அதன் தவணைப் பணமான ரூபா 706,272 2014 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தில் காண்பிக்கப்பட்ட கணக்குப் பதிவிற்கான அறிவுறுத்தல்களின் படி கடன் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதனச் செலவினக் கணக்கிற்கு வருமானத்தினால் பங்களிக்கப்படும் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 1,717,893 தொகையான முற்கொடுப்பனவு மீதி, பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 134,899 தொகையான உள்ளகக் கடன் மீதியும் ரூபா 2,500 தொகையான ஊழியர் பிணை வைப்புக் கணக்கும் மீளாய்வாண்டின் போதும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 46,445,192 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,342,720 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

-----------------------------

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

---------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | -------------------- | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 20,618 | 18,328 | 19,653 |
| (ii) | வாடகை | 1,394 | 1,400 | 694 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 552 | 532 | 26 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,181 | 1,026 | 3,779 |

**2.2.2 வீத வரி**

---------------

2013 திசெம்பர் 31 ஆம் திகதி சபைக்குரித்தான 3 உப அலுவலகங்களின் 42465 ஆதனங்களிலிருந்து ரூபா 25,436,320 தொகையான வீத வரி மீதி நிலுவையாகக் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வியாபார வரி**

----------------------

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வாத்துவ உப அலுவலக அதிகாரப் பகுதிக்குரித்தான 43 வியாபாரங்களிலிருந்து ரூபா 118,940 தொகையும், வாழைத்தோட்ட உப அலுவலக அதிகாரப் பகுதிக்குரித்தான 206 வியாபாரங்களிலிருந்து ரூபா 338,828 தொகையும் தந்திரிமுல்லை உப அலுவலக அதிகாரப் பகுதிக்குரித்தான 79 வியாபாரங்களிலிருந்து ரூபா 84,380 தொகையான வியாபார வரி நிலுவை மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாழைத்தோட்ட உப அலுவலகத்திற்குரித்தான 21 வியாபாரங்களிலிருந்து ரூபா 20,080 தொகையான வியாபார வரி நிலுவை மீதி காணப்பட்டது. வியாபாரம் மூடப்பட்டதாக வியாபார வரிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் சபையின் அங்கீகாரமின்றி பதிவேட்டிலிருந்து வெட்டி அகற்றப்பட்டிருந்தது.

### 2.2.4 வேலை வரி

-----------------

வாத்துவ, வாழைத்தோட்ட மற்றும் தந்திரிமுல்லை போன்ற உப அலுவலகங்களிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 95,960 தொகையான வேலை வரி மீதி நிலுவை நிலவிய போதிலும் 2014 சனவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 வியாபார வரி

------------------------

2013 ஆம் ஆண்டிற்கு வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத வாத்துவ உப அலுவலகத்தின் 4 வியாபாரங்களிலிருந்து ரூபா 10,200 தொகையும் வாழைத்தோட்ட உப அலுவலகத்தின் 15 வியாபாரங்களிலிருந்து ரூபா 11,500 தொகையும் தந்திரிமுல்லை உப அலுவலகத்தின் 96 வியாபாரங்களிலிருந்து ரூபா 20,860 தொகையும் வியாபார அனுமதிப்பத்திர நிலுவை மீதி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 வியாபார நிலைய வாடகை

-----------------------------------------

(அ) வாத்துவ உப அலுவலகத்திற்குரித்தான 3 பழைய கடைகளும் I, II மற்றும் III ஆம் கட்டத்திற்குரித்தான 6 கடைகளின் நிலுவை வாடகையான ரூபா 76,161 தொகையை அறவிடுவதற்கு 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் பழைய கடையொன்றிலிருந்து 2010 திசெம்பர் முதல் 2013 திசெம்பர் வரை அறவிடப்படாது நிலவிவரும் மீதி ரூபா 18,832 தொகையும் I ஆம் கட்ட கடையிலிருந்து 2008 ஆகஸ்ட் முதல் 2013 திசெம்பர் 31 வரை நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 44,729 தொகையாகவும் காணப்பட்டது. சட்டரீதியாகச் செயற்பட்ட இந் நிலுவை மீதியை அறவிடுவதற்கோ அல்லது கடையை கையேற்பதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வாழைத்தோட்ட உப அலுவலகத்திற்குரித்தான 25 கடைகளுக்குரித்தான ரூபா 579,650 தொகையான நிலுவை மீதியில் 2006, 2010, 2011 முதல் அறவிடப்படாது வரும் 07 கடைகளின் மீதி முறையே ரூபா 66,000, ரூபா

96,600 தொகையாகவும், ரூபா 88,200 தொகையாகவும், ரூபா29,250 தொகையாகவும், ரூபா 19,500 தொகையாகவும், ரூபா 28,350 தொகையாகவும் ரூபா 28,350 தொகையாகவும் காணப்பட்டது.

(இ) 1982 ஆம் 1986 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட கடை உடன்படிக்கைகளைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2003 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வாடகைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 காணி விற்பனை வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரஎல்லைக்குட்பட்ட காணி ஒன்று விற்பனை செய்யப்படுகையில் அல்லது ஏலவிற்பனை செய்யப்படுகையில் அக் காணி விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் 1% இற்கு சமனான வரி சபையால் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் 3 காணி விற்பனையிலிருந்து 1% வரித் தொகையாக ரூபா 318,979 தொகை அறவிடப்பட்டிருந்தது. அத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையில் 1% ஆனதுடன் எந்த சந்தர்ப்பத்திலும் காணியின் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 இலங்கை சுற்றுலா மேம்பாட்டு சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடல்

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஹொட்டேல், சிற்றுண்டிச் சாலைகள், விடுதிகளின் வருமானத்தில் 1 சதவீதத்திற்கு மேற்படாத அளவு அனுமத்திப்பத்திரக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய போதிலும் சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்குரித்தான 3 ஹொட்டேல்களிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்காக அதன் வரித் தொகை 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படுகையில் அந் நிறுவகங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த விபரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் உண்மையாக அனுமதிப்பத்திரக்கட்டணம் அறவிடப்பட வேண்டிய வருமானம் எவ்வளவு என்பதை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

**2.2.9 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 5,793,362 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 22,761,728 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

2012 முதல் 2013 திசெம்பர் வரை தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களின் இல்லத்திற்காக நாளாந்தமும் வார இறுதி பத்திரிகை விநியோகிக்கப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 57,020 தொகையும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 153,135 தொகையுமாக ரூபா 210,155 கூட்டுத்தொகை எவ்வித அங்கீகாரமும் இன்றி சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இச் செலவினம் தலைவரின் இல்லத்திற்காக 1642 பத்திரிகைகளும், உப தலைவரின் இல்லத்திற்காக 646 பத்திரிகைகளும், 15 உறுப்பினர்களுக்காக 6195 பத்திரிகைகளும் வழங்கப்பட்டதற்கானதாகும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகநெகும கிராம வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (2013) இன் கீழ் தெற்கு மொல்லிகொட முனமல்கஹவத்த வீதியின் நீளம் 70 மீற்றர்களும் அகலம் 3 மீற்றர்களுமான கொங்கிரீட் கற்கள் பதிக்கப்படும் 2 ஆம் கட்ட இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி, கற்துகள்கள் இடப்பட்டு தயாரிக்கப்பட்ட வீதியில் கற்கள் பதிக்கப்பட்டு நீக்கல்களை நிரப்பி தயாரிக்கப்படுவதற்காக ரூபா 29,284 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நீக்கல்கள் நிரப்பப்படாதிருந்ததுடன் வீதியின் இறுதி 30 மீற்றர்களில் கற்கள் ஆடியவண்ணம் காணப்பட்டமை 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹ வாத்துவ கங்காராம வீதியின் துணைப்பாதை (பீரிஸ் ஹாட்வெயர் அருகாமையிலுள்ள வீதி) கொங்கிரீட் கற்கள் பதிக்கப்பட்டு 70 மீற்றர் நீளமாக 3 மீற்றர் அகலமானதாகக் காணப்பட்டதுடன் இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி, கற்துகள்கள் இடப்பட்டு தயாரிக்கப்பட்ட வீதியில் கற்கள் பதிக்கப்பட்டு நீக்கல்கள் நிரப்பப்பட்டு இறுக்கித் தயாரிக்கப்படுவதற்காக ரூபா 29,263 செலுத்தப்பட்டிருந்த போதிலும் முதல் 16 மீற்றர்களில் கற்துகள் இடப்பட்டு நீக்கல்கள்

நிரப்பப்பட்டிராமை 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

## 3.3 முகாமைத்துவத் திறமையீனங்கள்

### (அ) ஊழியர் கடன்

(i) 04 ஊழியர்களின் ரூபா 330,475 தொகையான கடன் மீதியில் எவ்வித தவணைப்பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்படாது மீதி முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ii) ஊழியர் கடன் பட்டோலையின் படி, 2007 இற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 62,248 கூட்டுத்தொகையான 13 கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அக் கடன் மீதி, கடன் பதிவேட்டிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வாகனங்களின் 6 மாதத்திற்கு ஒரு தடவை எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருடாந்தம் வாகனம் தொடர்பான ஓர் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுகையில் நீண்ட காலதாமதம் காணப்பட்டதுடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் நாளதுவரையாக எழுதிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 சனவரி முதல் திசெம்பர் வரை 6558 கிலோ மீற்றர்கள் முச்சக்கர வண்டி பயணித்திருந்த போதிலும் பயணம் தொடர்பான விபரம் காண்பிக்கப்பட்டிராததுடன் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரின் குறுங் கையொப்பமும் இடப்பட்டிருக்கவில்லை.

### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

தலைவர், உபதலைவர், 21 உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் தாயிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஆய்விற்காக 08 நாட்கள் சுற்றுலாவில் கலந்து கொண்டிருந்ததுடன் இதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 6,124,150 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டுச் சுற்றுலா முடிவுற்று வருகை தந்து 01 மாதத்திற்குள் குறித்த சுற்றுலா தொடர்பான ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் சுற்றுலா பூர்த்தியடைந்து 02 மாதங்கள் முடிவுற்றிருந்த போதிலும் சுற்றுலாவில் கலந்து கொண்ட எவரும் அவ்வறிக்கையை வழங்கியிருக்கவில்லை.

(ii) குறித்த கற்கையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அறிவைப் பயன்படுத்தி சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் கழிவு முகாமைத்துவத்திற்காக சபை எவ்வித புதிய நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பித்திராததுடன் வழமை போல் சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியின் கழிவுப் பொருட்கள் மொறட்டுவை நகர சபை அதிகா எல்லைப் பிரதேசத்திற்குரித்தான கதிரியான குப்பை சேகரிப்பிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இடப்படுவது கண்டறியப்பட்டது. இதற்காக மொறட்டுவை மாநகர சபைக்கு ரூபா 2,751,727 தொகை 2013 ஆம் ஆண்டின் போது சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) செயற்திட்ட முகாமைத்துவம்

(உ) பாதீடிடல்